# DEPOSITION OF WITNESS.

(Chapter XXV, B.N.S.S)

IN THE FAST TRACK COURT (M.L) UTHAMAPALAYAM

Case No. STC.No.268/2025

Deposition of DW1

| | | |
|---|---|---|
| Name | : | திரு.கண்ணப்பிரான் |
| Father's / Husband Name | : | சங்கரப்பாண்டியன் |
| Village | : | |
| Taluk | : | உத்தமபாளையம் |
| Calling | : | ஏலக்காய் வியாபாரம் |
| Age | : | 56 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 7th day of May 2026.

புகார்தாரர் ஆஜர் இல்லை. BNSS 279ன் கீழ் மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது.

<u>முதல் விசாரணை:</u>

1. புகார்தாரரை எனக்கு தெரியாது. கொரோனா காலத்திற்கு முன்பு கந்துவட்டி கனி என்பவரிடம் நான் இரண்டு லட்சம் பணம் வாங்கி இருந்தேன். அதன் பின்பு எனக்கு இருதய அடைப்பு ஏற்பட்டு கேரளா மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். நான் சிகிச்சையில் இருந்து வந்த பிறகு என்னிடம் கந்து வட்டி கனி அசல் மற்றும் வட்டி பணம் கேட்டதன்பேரில் நான் கொடுக்கவேண்டிய அசல் மற்றும் வட்டி தொகையை திருப்பி செலுத்திவிட்டேன். மீண்டும் என்னிடம் வட்டி தரவேண்டும் என்று பிரச்சனை செய்தார். பார்க் ஸ்டாப் பொன்னையாத்தேவர் மகன் தர்மர் முன்னிலையில் சமரசம் பேசி வட்டியை வாங்கி ரூ.60 ஆயிரம் வட்டியை கந்துவட்டி கனியிடம் கொடுத்தேன். மீண்டும் எனக்கு வட்டி வேண்டும் என்று கூறி என்னை அடித்து, எனது இருசக்கர வாகனத்தை கந்துவட்டி கனி மற்றும் அவரது அக்காமகன் நிசாந்த் பிடிங்கி சென்றார்கள்.

இது சம்மந்தமாக போடி நகர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன்.

2. காவல் ஆய்வாளர் போன் செய்து கந்துவட்டி கனி என்பவரை அழைத்த போது இரண்டு நாட்கள் கழித்து அவர் வருவதாக கூறினார். மறுநாள் வங்கியில் இருந்து எனது காசோலை வசூல் ஆகாமால் திருப்பப்பட்டது சம்மந்தமாக எனக்கு குறுஞ்செய்தி வந்தது. எனது காசோலையானது மேற்படி இருசக்கர வாகனத்தில் வைத்திருந்தேன். மீண்டும் காவல் நிலையத்தில் சென்று தகவலை கூறிய போது, காவல் ஆய்வாளர் கந்துவட்டி கனி என்பவருக்கு போன் செய்தார். கந்துவட்டி கனி காவல் நிலையம் வந்தபோது காவல் ஆய்வாளர் பேசி எனது இருசக்கர வாகனத்தை பெற்று தந்தார். காசோலை சம்பந்தமாக நீதிமன்றத்திற்கு சென்று பார்த்துக் கொள்ளும்படி காவல் ஆய்வாளர் கூறிவிட்டார். CSR இரசீதை கேட்டதற்கு கந்துவட்டி கனி என்பவர் வழக்கறிஞர் என்பதால் பேசி அனுப்பி வைத்துவிட்டார்கள். புகார் தாரரை நான் பார்த்ததில்லை.எனக்கும் புகார்தாரருக்கும் எந்த போன் சம்பந்தமாக தொடர்பும் இல்லை. கனி என்பவரை பற்றி விசாரித்த போது அவர் மீது பல வழக்குகள் இருப்பதாக தெரிந்து கொண்டேன். கனி என்பவர் எனது காசோலையை எடுத்து வேறு நபர் மூலம் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

<u>புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் 25 வருடங்களாக ஏலக்காய் தொழில் செய்கிறேன். அத்துடன் சேர்த்து மிளகு தூள் தொழில் செய்கிறேனா என்றால் செய்கிறேன். நான் செய்யும் தொழிலுக்கு பெயர் வைத்துள்ளேனா என்றால் சென்னை ஜெமினி டிரேடர்ஸ் என்று பெயர் வைத்துள்ளேன். அதற்கு GST வரி செலுத்தி வருகிறேன். ஜெமினி டிரேடர்ஸ் என்ற பெயரில் வங்கி கணக்கு வைத்துள்னோ என்றால் TMB வங்கியில் கணக்கு வைத்துள்னே. CSB வங்கியில் எனது தனிப்பட்ட சேமிப்பு கணக்கு வைத்துள்ளேன். அந்த சேமிப்பு கணக்கு கண்ணப்பிரான் சங்கரப்பாண்டியன் என்ற பெயரில்

உள்ளது என்றால் சரிதான். அந்த சேமிப்பு கணக்கு காசோலையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படம் ம.சா.ஆ.1 காசோலை என்னுடையது என்றால் சரிதான். மேற்படி காசோலையில் உள்ள கையொப்பம் என்னுடையது என்றால் இல்லை.

2. எனக்கு 2 அறிவிப்புகள் வந்தத என்றால் சரிதான், 2 வது அறிவிப்பினை பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். 2 வது வாங்கிய வழக்கறிஞர் அறிவிப்பு ஒப்புதல் அட்டையில் உள்ள கையொப்பம் என்னுடையது என்றால் சரிதான். காசோலையில் உள்ள கையொப்பமும் மற்றும் ம.சா.ஆ.5 ல் உள்ள கையொப்பமும் ஒன்றாகதான் உள்ளது என்றால் இல்லை. நான் ஏலக்காய் தொழிலை 2 வருடங்களுக்கு முன்பு நஷ்டம் ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த சமயத்தில் வேறு நபர்களிடம் பணம் வாங்கியுள்ளேன் என்றால் வியாபாரம் ரீதியாக வாங்கியுள்ளேன். அதனடிப்படையில் புகார்தாரரிடம் பணம் வாங்கினேன் என்றும், அதனை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள போர்டு எனது வீட்டில் வைக்கப்பட்டது என்றால் சரிதான்.

3. கந்து வட்டி கனி என்பவரிடம் எந்த தேதியில் பணம் வாங்கினேன் என்று நான் முதல் விசாரயையில் கூறவில்லை என்றால் சரிதான். எந்த தேதியில் பணத்தை திருப்பி கொடுத்தேன் என்று எனது முதல் விசாரயையில் கூறவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் மீது காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. (உங்கள் மீது கொடுத்தேன் என்று எதிரி தரப்பு வழக்கறிஞரை சாட்சி கைநீட்டி காட்டியதால் கந்துவட்டி கனி என்பவர் யார் என்று நீதிமன்ற கேள்வி கேட்டபோது எதிரி தரப்பு வழக்கறிஞரை சாட்சி காண்ப்பித்து சாட்சியம் அளித்துள்ளார்.) பதில் அறிவிப்பில் உள்ள விபரங்களை யார் கூறி அனுப்பப்பட்டது என்றால் நான்தான் கூறினேன். கனி மீது உள்ள வழக்கின் எண்கள் தெரியுமா என்றால் தெரியாது. பதில் அறிவிப்பில் கனியின் மனைவி பெயர் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

4. கனியின் ஜீனியர் நிசாந்த், ராஜபாண்டி ஆகியோர் மீது வழக்கு

உள்ளதா என்றால் இல்லை. 09.06.2025ம் தேதியன்று மாலை 07.30 மணிக்கு அசேன் உசேன் தெருவில் உள்ள 4 முக்கில் நின்று கொண்டிருந்த எதிரியிடம் இருசக்கர வாகனத்தை எடுத்து கொண்டார் என்று கூறியுள்ள இடமானது மக்கள் நடமாடும் இடம் என்றால் சரிதான். அந்த இடத்தில் போடி நகர் காவல்நிலையத்திலிருந்து கேமிரா பொருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் உண்மையில் புகார் கொடுத்திருந்தால்மேற்படி கேமிராவில் இருக்கும் பதிவுகளை பார்த்து நடவடிக்கை எடுத்திருப்பார்கள் என்றால் சரிதான். நான் சொல்லபோல் இருசக்கர வாகனத்தை யாரும் எடுக்கவில்லை என்றும், அதனால்தான் போலீசார் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. 09.06.2025ம் தேதிக்கு பின்பு 10 நாட்கள் கழித்து நான் புகார் கொடுத்தாக கூறுகிறேன் என்றால் சரிதான். 09.06.2025 அல்லது 19.06.2025ம் தேதியன்று நான் கொடுத்ததாக சொல்லப்படும் புகார் மனுவினை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

5. 19.06.2025ம் தேதியன்று நான் கொடுத்ததாக சொல்லப்படும் புகார் மனுவின் நகல் மற்றும் மனு இரசீதின் நகல் வேண்டும் என்று கூறி RTI சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுத்தேன் என்றால் சரிதான். **19.06.2025ம் தேதியன்று எந்த புகாரும் கொடுக்கவில்லை என்று எனக்கு பதில் அறிவிப்பு அனுப்பப்பட்டதா என்றால் அனுப்பப்பட்டது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் மேற்படி பதில் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் ம.சா.ஆ.8 ஆகும்.** நான் பதில் அறிவிப்பில் கூறியதுபோல் நான் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றும், அவரது கட்சிக்காரர் வழக்கு பார்த்தால் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானும், தர்மரும் மார்க்கையன்கோட்டை சென்று புகார்தாரரிடம் ரூ.2 லட்சம் பணம் வாங்கினேன் என்றால் சரியல்ல. புகார்தாரரிடம் வாங்கிய பணத்தை திருப்பி செலுத்ததாத காரணத்தினால் அவர் என்மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வாகனத்தில் எடுத்ததற்கான கண்காணிப்பு கேமிரா பதிவை தாக்கல் செய்ய தயாரா என்றால் தயார்.

6. கந்து வட்டி கனி என்று எவ்வாறு கூறுகிறேன் என்றால் நான் வட்டிக்கு வாங்கியதை வைத்து கூறுகிறேன். நான் வட்டிக்கு வாங்கியதற்கு ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. அவர் வட்டிக்கு கொடுத்ததற்கு ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. ஒரு

வழக்கை இழுத்து அடிக்கும் என்ற நோக்கத்துடன் வாக்கறிஞர் மீது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகார்தாரரிடம் வாங்கிய தொகைக்கு வட்டியுடன் திருப்பி செலுத்த நான் கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.07 18:42:46 +0530

J.M, F.T.C(M.L),Uthamapalayam